Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

# ஆயர் சுற்றுமடல்

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/55/2024**

## ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!**
**அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும்**
**ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

சீரோ-மலபார் ஆயர் பேரவையால் தேர்ந்தெடுக்கப்பட்டு திருத்தந்தையின் ஒப்புதலோடு மேதகு இர.ஃபேல் தட்டில் அவர்கள் நமது சீரோமலபார் திருச்சபையின் நான்காவது உயர் பேராயராக 2024 ஜனவரி 11 ம் நாள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். உயர் பேராயர் அவர்கள் பொறுப்பேற்றப்பின் முதல்முறையாக நமது மறைமாவட்டத்தை அதிகார பூர்வமாக சந்திக்க உள்ளார். மறைமாவட்த்தின் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிப்பதைப் பற்றிய நிகழ்வுகளை இச்சுற்றுமடலின் வாயியாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

உயர் பேராயர் என்பவர் நமது திருச்சபையின் பொதுத்தலைவராகவும் ஆன்மீகத் தந்தையாகவும் உள்ளார். நமது திருச்சபை உறுப்பினர்களை நம்பிக்கை மற்றும் ஒழுக்கத்தில் வழிநடத்தும் பொறுப்பும் அவருடையதே. கிழக்கு சுரியானி வழிபாட்டு மரபைப் பின்பற்றும் திருச்சபையின் வழிபாட்டு முறைகள் மற்றும் சடங்குகளை முறையாக நடத்துவதை அவர் உறுதி செய்கிறார். சீரோமலபார் திருச்சபை ஏனையத் திருச்சபையினரோடும், கத்தோலிக்க திருச்சபையின் தலைமையிடமான வத்திக்கானுடனும் உள்ள உறவுகளில் அவர் பிரதிநிதித்துவம் பெறுகிறார். சீரோ-மலபார் திருச்சபை மக்களுக்கு ஆயர் பராமரிப்பு மற்றும் வழிகாட்டுதலை அவர் வழங்குவதோடு அவர்களின் ஆன்மீக மற்றும் சமூகத் தேவைகளையும் நிறைவு செய்கிறார். சீரோமலபார் திருச்சபையின் ஆயர் பேரவையில் இவர் முதன்மையான பங்கு வகிக்கிறார். அதன் முடிவுகள் மற்றும் செயல்பாடுகளுக்கு வழிகாட்டுகிறார்.

இத்தகு சீரிய பொறுப்புகளைப் பெற்றுள்ள நமது உயர் பேராயர் அவர்கள், 2024 ஆகஸ்ட் 10 மற்றும் 11 (சனி, ஞாயிறு) ஆகிய இரு நாட்கள் நமது மறைமாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகஸ்ட் 10-ம் நாள் (சனிக்கிழமை) மதியம் தக்கலை ஆயர் இல்லத்திற்கு வருகை தரும் அவர், அன்று மாலை 4 மணிக்கு மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து அருட்தந்தையரையும் துறவிகளையும் படந்தாலுமூடு, திரு இருதய மறைவட்ட ஆலயத்தில் சந்திக்கிறார். தொடர்ந்து, ஆகஸ்ட் 11-ம் நாள் ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு நமது மறைமாவட்டத்திலுள்ள அனைத்து இறைமக்களையும், நித்திரவிளை, ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தில் சந்திப்பதோடு திருப்பலியும் நிறைவேற்றி நமக்காகச் செபிக்க உள்ளார்கள். அதனைத் தொடர்ந்து நடைபெறும் வாழ்த்து கூடுகையோடு உயர் பேராயரின் மறைமாவட்டச் சந்திப்பு நிறைவுபெறும்.

இவ்இனிய நிகழ்வில் நமது மறைமாவட்ட அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் அனைவரும் பங்கேற்று இறையாசி பெற உங்களை அன்புடன் அழைக்கிறேன். குறைந்த பட்சம் ஒரு பங்கிலிருந்து 10 பேராவது பங்கேற்க வேண்டும். அதற்கு மேலும் பங்கேற்க விரும்பினால், அதிகப்படியாக பங்கேற்கும் நபர்களின் எண்ணிக்கையை நித்திரவிளை பங்குத்தந்தை பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களிடம் தெரிவிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புக்குரியவர்களே, இந்த நல்ல நிகழ்வை அறிவிக்கும் இந்நேரத்தில்; கேரள மாநிலம் வயநாட்டில் இயற்கைப் பேரிடரால் அடையாளமே தெரியாத அளவில் பேரழிவு நிகழ்ந்துள்ளது. மீட்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இத்துயர நிகழ்வு நடந்ததை அறிந்தவுடன் அந்த மாவட்டத்தில் அமைந்துள்ள மானந்தவாடி மறைமாவட்ட ஆயர் மார் ஜோஸ் பொருந்நேடம் அவர்களைத் தொடர்பு கொண்டு பேசினேன். 500-க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்துள்ளதாகவும் 10000 க்கும் மேற்பட்ட நபர்கள் பல்வேறு முகாம்களில் தற்காலிகமாக வாழ்கிறார்கள் எனவும் 300-க்கும் அதிகமானோர் மரணம் அடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார். மேலும், ஏராளமான மக்களை இதுவரை கண்டு பிடிக்க இயலவில்லை. இரண்டு நகரங்கள் முழுவதுமாக அழிந்துள்ளன எனவும் செய்திகள் வாயிலாகவும் அறிந்தேன். இத்துயர நிகழ்வு நம் அனைவரையும் கவலைக்கு உள்ளாக்கி இருக்கிறது. இத்தருணத்தில் அவர்களுக்காக நாம் இறைவனிடம் வேண்டுதல் செய்வோம்.

அன்பு இறைமக்களே! உயிரையும், உடைமைகளையும் இழந்து தவிக்கும் வயநாடு மக்களின் புனரமைப்புப் பணிகளுக்கு உதவ வேண்டியது நம்முடைய கடமையாக இருக்கிறது. நாம் நமது மறைமாவட்டம் சார்பில் குறைந்தது 10 வீடுகளையாவது கட்டிக்கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அதற்கான நிதி உதவிகளை பல்வேறு வழிகளில் ஆராய்ந்து வருகிறோம். அதன் ஒரு பகுதியாக இம்மாதம் 11-ம் நாள் ஞாயிறு திருப்பலியின் போது எடுக்கப்படும் சிறப்புக் காணிக்கையில் தாராள மனதுடன் நிதி உதவி வழங்குமாறு வேண்டுகிறேன். மேலும், உங்கள் அனுதின செபத்திலும் அம்மக்களுக்காக செபிக்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் உங்கள் முயற்சிகளையும் உங்கள் தேவைகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
02.08.2024

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

✞ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

**குறிப்பு:** இச்சுற்றுமடலை 04.08.2024, ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் திருப்பலிக்குப் பின் அறிவிப்பின் வேளைவில் வாசிக்க வேண்டும்.